2006 ஜனவரி 25]

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்றுத் தொண்ணூறு முதல் இருநூற்றுத் தொண்ணூற்று ஆறு வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுத் தொண்ணூற்று நான்கு முதல் இருநூறு வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. ப. இராஜரெத்தினம்.

திரு. ப. இராஜரெத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் சார்பாக, குழுவின் பதினைந்து மற்றும் பதினாறாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால், மேற்படி அறிக்கைகளின் படிப்பெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.